IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS

S.C.NO.155/2025

Deposition of Witness for P.W.1

| | | |
|---|---|---|
| NAME | - | திரு.உமாசங்கர் |
| FATHER NAME | - | திரு.கண்ணாயிரம் |
| AGE | - | 51 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 15.06.2026.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

குறுக்கு விசாரணை–எதிரிகள் 1,3,4,6,15,16 தரப்பில்

சத்துவாச்சாரி காவல் நிலையத்தில் இருந்து பெருமுகை ஒயின் ஷாப் சுமார் 4 கி.மீ தூரம் இருக்கும். நான் ஏறியூரில் குடியிருக்கிறேன். ஏறியூருக்கும் பெருமுகை ஒயின் ஷாப்க்கும் சுமார் 3.5 கிமீ தூரம் இருக்கும் என்றால் சரி. தேசிய நெடுஞ்சாலை இருந்து பெருமுகை ஒயின் ஷாப் 0.5 கிமீ தூரம் இருக்கும். தேசிய நெடுஞ்சாலை இருந்து பெருமுகை ஒயின் ஷாப்க்கு செல்ல பள்ளி கூடம் வழியாக செல்லமுடியும் என்றால் 3 வழி உள்ளது. அலமேலுரங்காபுரத்திற்கும் பெருமுகை ஒயின் ஷாப்க்கும் 3.5 கிமீ தூரம் இருக்கும் என்றால் சரி. ஆட்டே நகருக்கும் பெருமுகை ஒயின் ஷாப்க்கும் 3/4 கிமீ தூரம் இருக்கும் என்றால் சரி. ஒயின் ஷாப்க்கு செல்லும் தெற்கில் இருந்து வடக்காக செல்லும் சாலை. ரோடிற்கு கிழக்காக ஒயின் ஷாப் உள்ளது. ஒயின் ஷாப் இருந்து 200 மீட்டர் தொலைவில் சுடுகாடு உள்ளது. எனது மகன் சந்துருவின் பல்வேறு வழக்கு உள்ளது என்றால் சரி. சாட்சி சொன்ன சுதாகர் ரமேஷ் மீது பல்வேறு வழக்கு உள்ளது என்றால் சரியல்ல. இரவு 10 மணிக்கு பாரை பூட்டி விட்டால் மறுநாள் 12 மணிக்கு தான் திறப்போம் என்றால் சரி. பார் சுமார் 50 சென்ட்ல் அமைந்துள்ளது. பாரை சுற்றி கம்பி வேலி கேட் அமைத்துள்ளது. பார் கேட்டை பூட்டி விட்டால் உள்ளே யாரும் செல்ல முடியாது. நான் நடத்தும் அரசு அனுமதி பெற்றது. நான்போலிசாரிடம் பார் நடத்துவதற்கான

அனுமதி கொடுத்தேன். புகார் கொடுக்கும்போது பார் நடத்துவதற்கான அனுமதியை அவர்களிடம் கொடுக்கவில்லை. ஏறியூர் அலமேலுரங்காபுரத்திற்கும் ஊர் பிரச்சனை உள்ளது. அன்று ஏறியூரில் தீ மிதி பெருவிழா நடைபெற்றது. திருவிழாவில் போலிசார் பந்தோபஸ்து இருந்தது. தீ மிதி திருவிழாவின் போது எதிரிகளை போலிசார் காவல் நிலையத்திற்கு அழைத்து சொன்றார்கள் என்றால் சரியல்ல. தீ மிதி திருவிழாவின் போது பிரச்சனை ஏற்பட்டது. அன்று விடியற்காலை 03.00 மணிக்கு காவல் நிலையத்திற்கு போனேன். நான் கொடுத்த புகாரில் தேதி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகாரில் தேதி குறிப்பிட்டு தான் புகார் கொடுத்தேன். புகார் விடியற்காலையில் எப்படி கணினி தட்டச்சு செய்யப்பட்டது என்றால் எனது நண்பர் வீட்டில் புகார் தட்டச்சு செய்தேன். எனது நண்பர் ஏறியூர் சேர்ந்தவர். புகாரில் யார் கணினி தட்டச்சு செய்தது அவர் எந்த ஊரை சேர்ந்தவர் என்று சொல்லவில்லை என்றால் சரி. தட்டச்சு செய்தவரை இந்த வழக்கில் சாட்சியாக குறிப்பிடவில்லை. தீயணைப்பு துறையினர் சுமார் 11 மணிக்க சம்பவ இடத்திற்கு வந்தார்கள். தீயணைப்பு துறையினர் வந்த போது போலிசார் அங்கு இல்லை. தீயணைப்பு துறைக்கு ஊர்காரர்களே தகவல் சொன்னார்கள். தீயணைப்பு துறையினர் வந்த போது நான் பாரில் இல்லை அவர்கள் எவ்வளவு நேரம் தீ யை அனைத்தார்கள் என்று தெரியாது. சம்பவம் குறித்து ஊர் பொது மக்கள் பாரில் கலவரம் நடந்தது தீயணைப்பு துறையினர் வந்தார்கள் என போலிசாருக்கு தகவல் கொடுத்தார்கள். போலிசார் சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்கு வந்தார்கள் என்று தெரியாது. பார் தனியாருக்கு சொந்தமானது. பார் பொது இடத்தில் அமையவில்லை. நான் எதிரிகள் மிரட்டினார்கள் என முன் விரோதத்தின் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே எனது மகனுக்கும் எதிரிகளுக்கும் விரோதம் உள்ளது என்றால் அன்றேய தேதியில் யாரே தள்ளி விட்ட கரும்பு ஜீஸ் கடைக்கு எனது மகன் தான் தள்ளிவிட்டார் என சொல்லினார்கள். அந்த ஊரில் பார் நடத்த கூடாது என பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக எதிரிகள் போராட்டம்

நடத்தியதினால் எதிரிகள் மீது பொய் புகார் அளித்தேன் என்றால் சரியல்ல.. பாரில் கேமிரா உள்ளது அதில் யார் யார் எத்தனை மணிக்கு வந்தார்கள் போனார்கள் என்ற விவரம் இருக்கும் என்றால் சரிதான். பொருட்களை கொலுத்திவிட்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடமான பாரில் இருந்து காவல் நிலையத்திற்கு நடந்துபோனால் அரை மணி நேரத்தில் போய்விடலாம். 9003438045 என்ற செல்போன் என் என்னுடையது. அதை நான் 8 வருடமாக பயன்படுக்கிறேன். சம்பவம் 09.45 மணிக்கு நடைபெற்றது. சம்பவம் சுமார் அரை மணிநேரம் நடந்தது. ஒயின் ஷாப் எதிரே ஆட்டோ நகர் உள்ளது. ஆட்டோ நகரில் லாரி வேலை கார் ஒர்க் ஷாப் எப்போதும் நிற்பார்கள் என்றால் சரி.மெயின் ரோடுக்கு அருகே 2 ஊர் உள்ளது . மெயின் ரோட்டிற்கு 300 மீ தொலைவில் ஒயின் ஷாப் உள்ளது. அங்கே பள்ளிகூடம் ஊர் மக்கள் வசிக்கிறார்கள் என்றால் சரி. மெயின் ரோட்டில் இருந்து ஒயின் ஷாப் மற்றும் பார்ரை தாண்டி சுடுகாடு செல்லும் வரை கார் ஒர்க்ஷாப் உள்ளது என்றால் சரி.பார் எனது பெயரிலே எனது உறவினர்கள் பெயரிலோ உள்ளது என காண்பிப்பதற்கு அத்தாட்சி எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. அரசாங்கம் நடத்தும் டாஸ்மார்க் பக்கத்தில் தான் எனது பார் உள்ளது என்றல் சரி. மதியம் 12.00 மணிக்கு பார் திறந்து இரவு 10.00 மணி வரை செயல் படும் என்றால் சரி. சம்பவத்தின் போது டாஸ்மார்க்கில் சரக்கை விறப்னை செய்து கொண்டிருந்தார்கள் என்றால் சரி. சரக்கை வாங்கி கொண்டு எனது பாரில் குடிக்க வசதி இல்லாதவர்கள் ரோட்டில் உட்காந்து குடிப்பார்கள் என்றால் சரி. ஒயின் ஷாப்பில் யார் யார் வேலை செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. பாரை எனது மகனை தான் நிர்வாகம் செய்கிறார். பாருக்கு ம் எனக்கு ம எந்த சம்பந்தமும் கிடையாது. இந்த சம்பவம் நடந்த சமயத்தில் காமராஜ் தான் இருந்தார். காமராஜ் கேட்டால் தான் அன்று ஒயின் ஷாப்பில் யார் இருந்தார்கள் என்று தெரியும். காமராஜ் பெருமுகை சேர்ந்தவர். காமராஜிக்கு எவ்வளவு சம்பவம் என்று எனது மகனுக்கு தான் தெரியும். பாருக்கு மாதம் எவ்வளவு மின்சார

கட்டணம் செலுத்துக்கிறோம் என்று என் மகனுக்கு தா்ன தெரியும் . பார்க்கான அனுமதி கடிதம் நிர்வாகம் பற்றி எனது மகனுக்கு தான் தெரியும். பாரில் அனைத்து பொருட்கள் குறித்து எனது மகனுக்கு தான் தெரியும். நான் பாரில் இருந்து பாத்ரூம்க்கு 09.40 மணிக்கு போனேன். பாரில் இருந்து சுமார் 100 மீட்டருக்குள் நான் பாத்ரூம் போனேன். நான் சம்பவத்தின்போது எதிரிகளுக்கு பயந்துக்கொண்டு முட்புதரில் ஒளிந்துக்கொண்டேன். காமராஜ் தான் கண்ணால் பார்த்த சாட்சி அவர் இறந்துவிட்டார். நான் 3 வகுப்பு படித்துள்ளேன். எழுத படிக்க தெரியாது. ராமன் என்பவர் புகாரை தயார் செய்தார் . அவர் சித்துர் சேர்ந்தவர். அவர் ஏறியூரில் இருந்தார். அவர் ஏறியூரில் எந்த விலாசத்தில் இருந்தார் என்று எனக்கு தெரியாது. நான் தட்டச்சு செய்ததாக சொல்லபடும் ராமன் என்பவர் வீடு எங்கிருந்தது என்று எனக்கு தெரியாது. ஏறியூரில் நான் 39 வருடமாக குடியிருக்கிறேன். ராமனுக்கு வயது சுமார் 25 இருக்கும். ராமர் அப்பா பெயர் தெரியாது. ராமருக்கு திருமணம் ஆனதா என்று எனக்கு தெரியாது. ராமன் வீடு யார் வீட்டிற்கு பக்கத்தில் உள்ளது என்று எனக்கு தெரியாது. ராமன் சித்தூரில் நெட் சென்டர் வைத்துள்ளதாக சொன்னார். என்னிடம் காண்பிக்கப்படும் அ.த.சா.ஆ.1 புகாரில் என்ன எழுதப்பட்டு இருக்கு என்பது தெரியும். என்னிடம் புகாரில் அவர் என்ன எழுதி கொடுத்தார் என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். என் வீட்டிற்கு 5 வீடு தள்ளி சேகர் மேஸ்திரி வீடு உள்ளது அவருடைய அப்பா பெயர் தெரியாது. சேகர் மேஸ்திரி அங்கு 35 வருடம் இருக்கறிர். எனது வீட்டிற்கு கிழக்காக சேட்டு வீடு உள்ளது அவருடைய அப்பா பெயர் தெரியாது. சேட்டு 35 வருடமாக அங்கு குடியிருக்கிறார். எதிரிகள் என்னுடைய ஊரை சேர்ந்தவர்கள் கிடையாது அவர்கள் அலமேலுரங்காபுரத்தில் உள்ளார்கள். சேட்டு சேகர் எனக்கு நல்லது கெட்டதில் கலந்து கொள்வார்கள். 35 வருடமான எனது வீட்டின் அருகே இருக்கும் சேட்டு சேகர் அவர்கள் அப்பா பெயரே தெரியாது போது எதிரிகளுடைய அப்பா பெயர் போலிசார் சொன்னதின் பேரில் காவல் நிலையத்தில் வைத்து தயாரித்தது

பொருத்து புகார் கொடுத்தேன் என்றால் சரி. 1வது எதிரி கரும்பு ஜீஸ் கடை வைத்து நடத்தி வருகிறார்.

எனது மகனின் நண்பர்கள் 1வது எதிரி கரும்பு ஜீஸ் கடையை தள்ளி விட்டதாக 1வது எதிரியே சொன்னார் எனது மகனுக்கு சம்பந்தம் கிடையாது. எதிரிகளுடைய அப்பா பெயர் தட்டச்சு செய்தவரே பூர்த்தி செய்துக்கொண்டாரா என்றால் எங்கள் ஊர்காரரான சேட்டு சொன்னார். அந்த சேட்டின் தந்தை ரங்கநாதன் . அந்த சேட்டிற்கும் எதிரிகளுக்கு எந் தகராறும் கிடையாது. சேட்டின் மகன் பெயர் சதிஷ். சம்பவத்தில் ஈடுப்பட்டவர்கள் எதிரிகள் அவருடைய பெயர் மற்றும் அப்பா பெயர் சேட்டு தான் சொன்னார். சேட்டு எதிரிகள் மற்றும் எதிரிகளுயை அப்பா பெயர் என்னிடம் சொல்லவில்லை என்றால் எனக்கு எதிரிகள் பற்றி தெரியாது என்றால் சரியல்ல. எதிரிகளுடைய அப்பா பெயர் மட்டும் தான் தெரிந்திருக்காது. எதிரிகள் என்ன வேலை செய்கிறார்கள் திருமணம் ஆனாத என்று எனக்கு தெரியாது. 4 எதிரிகள் பெயர் தவிற மற்ற எதிரிகள் பெயர் தெரியாது. 1 வது எதிரி உறவினர்கள் தான் மற்ற 3 எதிரிகள் என்றால் சரி. சம்பவ இடதிலிருந்து நான் 10.15 மணிக்கு போய்விட்டேன். சம்பவ இடத்திலிருந்து 10.15 மணிக்கு கிளம்பி 02.00 மணிக்கு கணினி தட்டச்சு செய்ய போனேன். 10.15 மணியில் இருந்து 02.00 மணி வரை நான் ஏறியூரிலேயே சுற்றி கொண்டு இருந்தேன். என் வீட்டிற்கு செல்வதற்கு 4 வழிகள் உள்ளது. ஏறியூரி'ல் திருவிழாவிற்கு 10 போலிசார் உள்ளார்கள்.

ஏறியூரில் திருவிழாவில் பாட்டு கச்சேரியில் மக்கள் இருந்தார்கள். 07.30 மணிக்கு ஏறியூரில் பிரச்சனை ஆன போது போலிசார் 200 பேர் பிரச்சனை ஆன பிறகு வந்தார்களாக என்று எனக்கு தெரியாது.பிரச்சனை ஆனது பற்றி எனக்கு மறுநாள் தான் தெரியும். கணினி தட்டச்சு செய்த ராமன்க்கு போன் எதுவும் செய்யவில்லை. சம்பத்தன்று நான் சம்பவம் நடந்த சமயத்தில் 100 போலிசாருக்கு என் போன் மூலம் தகவல் சொன்னேன். 100 போலிசார் வந்தார்களா என்று எனக்கு தெரியாது உயிர் பயத்தில் நான் ஓடிவிட்டேன். உயிர் பாதுகாப்பு எனது மகனுக்கோ எனது மகனின் நண்பர்கோ போன் செய்தேனா என்றால் போன்

செய்தேன் இருவரும்போன் எடுக்கவில்லை. சம்பவத்தை கேள்விப்பட்டு எத்தனை பேர் ஏறியூர் இருந்து வந்து பாரை பார்த்தார்களா என்றால் யாரும் நான் இருக்கும் வரை வரவில்லை, எனது மகள் போலிசார் வேலை செய்கிறார். எனது மகளுக்கு நான் போன் செய்து உயிர் பாதுகாப்புக்காக போன் செய்யவில்லை. ஏறியூர் திருவழாவில் உள்ள போலிசாரிடம் நான் இரவு 02.00 மணிக்கு சென்று உயிர் பாதுகாப்பு கேட்டேனா என்றால் அங்கு அப்போது போலிசார் இல்லை. ஏறியூரிலும அலமேலுரங்காபுரத்திலும் 28ம் தேதி இரவு 08.00 மணியில் இருந்து 20நாட்கள் போலிசார் picketing இருந்தார்களா என்றால் சரி. நானும் காமராஜி போலிசாரிடம் சென்று புகார்கொடுத்தோம். நான் காமராஜிக்கு இரவு 12.45 மணிக்கு ஏறியூரிக்கு வந்தார். ஏறியூரிலிருந்து நானும் காமராஜி நடந்துபோய் போலிசாரிடம் சென்று புகார்கொடுத்தோம். புகாரை கொடுத்துவிட்டு நானும் காமராஜிம் வீட்டிற்கு வந்து விட்டோம். சம்பவ இடத்திற்கு போலிசார் போனார்களா இல்லையா என்று எனக்கு தெரியாது. பார்ன் சாவி காமராஜிடம் இருந்தது காமராஜி பாரை பூட்டி கொண்டு வந்தாரா என்று தெரியாது. பாருக்கு உண்டான சொத்துகள் பற்றி காமராஜிக்கு மட்டும் தெரியும் வேறுயாருக்கு தெரியாது. எனது மகன் சந்துருவும் அ.சா.2 ம் நண்பர்கள். சாட்சி பின்னிட்டு ஊர்காரர் என்று கூறுகின்றார். புகார் கொடுத்த பிறகு போலிசார் என்னை விசாரிக்கவில்லை . சம்பவ இடத்தில் இருட்டாக இல்லையென்றால் அன்றே எதிரிகள் என்னை கொலை செய்திருப்பார்கள் என்றால் சரி. நான் முள்காட்டில் ஒளிந்து கொண்ட போது முள் குத்தி சிகிச்சை எதுக்கும் மருத்துவமனைக்கு செல்லவில்லை. ஒயின்ஷாப்பில் அருகில் குப்பை கொளுத்தும் கிடங்கு உள்ளது. பெருமுகையை சேர்ந்த குப்பை ஒயின்ஷாப்பில் அருகில் குப்பை கொளுத்துவார்கள். ஒயின் ஷாப்பில் குடிப்பவர்கள் பாட்டில் உடைத்துவிட்டு செல்வார்கள் என்றால் சரியல்ல. 1வது எதிரி கரும்பு ஜீஸ் கடையை எனது மகனும் அவருடைய நண்பர்களும் தள்ளிவிட்டார்கள் என்றும் 1வது எதிரி போலிசாரிடம் புகார் கொடுத்து போலிசா புகாரை பதிவு செய்யாததால் சாலை மறியல் செய்தார்கள் என்றால் சரியல்ல. புகார் கொடுத்தது பற்றி எனக்கு தெரியாது. எனது மகன் அப்போது எங்கு இருந்தார் என்று தெரியாது. சம்பவத்தன்று பாரில் இருந்தேன் ஆனால் பாரை நிர்வகிக்கவில்லை. அன்று ஒரு நாள் மட்டும நான் பாரை நிர்வகிக்கவில்லை. நான் சொல்வது போல் எவ்வித சம்பவமும்

நடைபெறவில்லை என்றும் 1 வது எதிரி கொடுத்த புகாரில் போலிசார் எனது மகன் மீது நடவடிக்கை எடுத்துவிடுவார்கள் என்று எதிரிகள் மீது  பொய் வழக்கு கொடுத்தேன் என்றால் சரியல்ல. ஒயின் ஷாப் பக்கத்தில் உள்ள குப்பை கிடங்கிலிருந்து தீ காற்றில் பரவி பார் சிறிது எறிந்தது என்றால் சரியல்ல. இதுபோல் ஒரு சம்பவம் நடந்திருந்தால் டாஸ்மார்க்கில் தான் புகார் கொடுத்து இருப்பார்கள் என்றால் சரியல்ல. டாஸ்மார்க்கும் பாரும் ஒரே கேட்டிற்குள்தான் இருக்கிறது என்றால் சரி. டாஸ்மார்க்கிற்கு இரவில் லோடு வந்தால் கேட்டை திறந்து லோடு இறக்குவார்கள் என்றால் சரி. டாஸ்மார்க்கு வாஜ்மேன் இல்லை. நான் எதிரிகளுடைய ஊர் அப்பா பெயர் ஆலோசித்து ஆலோசனை பேரில் புகார் கொடுத்ததினால் தான் கால தாமதம் ஆனது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. குப்பை கிடங்கில் இருந்து பற்றிய தீயை எதிரிகள் கொளுத்தியதாக  என் மகன் மீது வழக்கில் இருந்து தப்பிப்பதற்கு எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் நான் கூறியவை  உதவி ஆய்வாளர் சொல்லி கொடுத்து நான் சொன்னேன் என்றால் சரியல்ல. உதவி ஆய்வாளர் என்னை நீதிமனற்த்திற்கு கூட்டி கொண்டு வந்தார் என்றால் சரி. வழக்கு சொத்தை நானே தயார் செய்து போலிசாரிடம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று  15.06.2026 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN
Digitally signed by P V SANDILYAN

Additional District Judge(FTC),
Vellore